# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முறையீட்டு மனு எண்: 383/2016/பேரூ

ஆணை நாள்: 09/07/2018

திருமதி. லதா,
முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர்,
குற்றாலம் பேரூராட்சி,
22/30, செங்கோட்டை சாலை,
குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம் – 627 802. – முறையீட்டு மனுதாரர்

திரு. மு. கணேஷ் தாமோதரன்,
பேரூராட்சி துணை தலைவர்
திரு. இளங்கோவன்,
முன்னாள் செயல் அலுவலர் குற்றாலம் பேரூராட்சி,
மற்றும் பிறர். – எதிர் மனுதாரர்கள்

## ஆணை

முறையீட்டு மனுதாரரது 30.10.2015 நாளிட்ட புகார் கடிதம், பேரூராட்சிகளின் இயக்குநரக 27.4.2016 நாளிட்ட கடிதத்துடன் 06.05.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு நடவடிக்கைக்காக வரப்பெற்றது. மேற்படி மனு, மனு எண்.0383/2016 ஆக இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்யப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 11.05.2016 நாளிட்ட அறிவிப்பின் மூலம், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (முறையீட்டு தாக்கல் வழி முறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள், 2015ன் விதி 6ன்படி முறையீட்டு மனுவினை உரிய படிவத்தில், ரூ.10/–க்கான நீதிமன்ற கட்டண வில்லையுடனும் தாக்கல் செய்யுமாறு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது.

அதன்படி மனுதாரர் தனது 3.6.2016 நாளிட்ட உரிய படிவத்திலான முறையீட்டு மனுவினை நீதிமன்ற கட்டண வில்லையுடன் அனுப்பிவைத்தார். முறையீட்டு மனுதாரரது மேற்படி புகார் மனுவில் குற்றாலம் பேரூராட்சியின் முன்னாள் துணை தலைவர் மற்றும் பேரூராட்சி செயல்

அலுவலர் சில வார்டு உறுப்பினர்களது செயல்பாடுகளால் பேரூராட்சி மன்ற கூட்டம் பெரும்பாண்மையின்மையால் நடத்த முடியாமல் போனது குறித்தும், சில முக்கிய தீர்மானங்கள் இயற்ற முடியாத நிலை ஏற்பட்டது குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கார் பார்க்கிங் கட்டண வசூல் மற்றும் கழிப்பறை கட்டண வசூல் முறைகேடுகள் குறித்தும் கார் பார்க்கிங் கட்டண வசூல் ஏல நிலுவைத் தொகை ரூ.8,60,294/- குத்தகைதாரர் திரு. முருகன் என்பவரிடமிருந்து வசூலிக்கப்படாமல் உள்ளது குறித்தும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி புகார் மனு குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு குற்றாலம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவம் 15.6.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

அதன்படி குற்றாலம் பேரூராட்சி செயல் அலுவலரது 12.07.2016 நாளிட்ட அறிக்கை வரப்பெற்றது. அதில் புகார் மனுவில் குறிப்பிடப்பட்ட, 06.11.2015 அன்று நடைபெற்ற பேரூராட்சி மன்ற சாதாரணக் கூட்டத்தில் துணை தலைவர் மற்றும் சில உறுப்பினர்கள் (3 நபர்கள்) மன்றத்தில் வைக்கப்பட்ட அனைத்துப் பொருட்கள் மீதும் ஆட்சேபித்த காரணத்தால், பேரூராட்சி மருந்தகத்திற்கு பொது மக்கள் பயன்பாட்டிற்கு வாங்கப்பட வேண்டிய அத்தியாவசியமான மருந்துப் பொருட்களும் வாங்க முடியாமல் போனதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் தங்களது ஆட்சேபனையை அவர்கள் திரும்பப் பெற்றதன் அடிப்படையில் 4.1.2016 அன்று மன்ற முன் அனுமதி பெற்று மருந்து பொருட்கள் வாங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பொது மக்களின் அத்தியாவசிய தேவை குறித்தான பணிகள் தொடர்பான கூட்டப் பொருட்களுக்கு ஆட்சேபனை மற்றும் பேரூராட்சி மன்றக் கூட்டத்திற்கும் ஒத்துழைப்பின்மை என்பது ஏற்புடையதல்ல.

நிர்வாக அதிகாரியான பேரூராட்சி செயல் அலுவலருமே மன்றக் கூட்டத்தினை முறையாக நடத்திட உரிய நடவடிக்கைகள் எடுக்க தவறியுள்ள நிலையே ஏற்பட்டுள்ளது என்பதும் தெளிவாகின்றது. இது சம்பந்தப்பட்ட செயல் அலுவலர்களின் பொறுப்பற்ற கடமை தவறிய செயலாகும்.

மேலும், செயல் அலுவலரது மேற்படி அறிக்கையில் 2015-16ஆம் வருட, பேரூராட்சி கார் பார்க்கிங் வாகன நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை ரத்து செய்தது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு (ரீ.பே.எண்.19346/15) நடைபெற்று வருவதாக

தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஆவணங்களைப் பரிசீலித்ததில் மேற்படி வழக்கு 12.04.2016 அன்று முடிவுற்று மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை அமர்வினால் தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது புலனாகிறது. மேலும், இம்முறைமன்ற நடுவம் 01.08.2016 நாளிட்ட அறிவிப்பாணையினைத் தொடர்ந்து செயல் அலுவலரால் தாக்கல் செய்யப்பட்ட 31.8.2016 நாளிட்ட அறிக்கையிலும் மேற்கண்ட வழக்கின் நிலையினை உறுதி செய்து தீர்ப்பு நகலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட 12.04.2016 நாளிட்ட மாண்பமை நீதிமன்ற தீர்ப்புரையில் கீழ்க்கண்டவாறு கார்பார்க்கிங் ஏல நிலுவைத் தொகையினை வசூலிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

*"...it is directed that as the arrears amount works out to Rs.8,60,294/-*
*the fourth respondent (E.O.) is directed to take*
*earnest steps to collect the amount from the petitioner."*

மேற்படி நிலுவைத் தொகையினை வசூலிக்க குத்தகைதாரருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாக திரு. கு. லிங்கராஜ், செயல் அலுவலர் 26.10.2016 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகி வாக்குமூலம் அளித்துள்ளார். மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள மன்றக் கூட்டங்கள் முறையாக நடைபெறாத காலக்கட்டங்களில் செயல் அலுவலர் பொறுப்பிலிருந்த திரு. இரா. இளங்கோவன் என்பவர் தற்போது தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநராக பணி புரிந்து வருவதாகவும் தெரிவித்தார். எனவே, மேற்படி அலுவலர் 2.12.2016, 9.1.2017 ஆகிய நாட்களில் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். 02.12.2016 அன்று அலுவல் நிமித்தமான பயிற்சிக்கு செல்வதாலும் பின்னர் தனது உடல் நிலை சரியின்மை காரணத்தை தெரிவித்தும் தனித்தனியே கடிதங்களை அனுப்பி திரு. இரா இளங்கோவன் அவர்கள் மேற்படி விசாரணைகளில் கலந்து கொள்ளவில்லை. இருப்பினும் அவருக்கு 13.3.2017 அன்று ஆஜராகுமாறு கூடுதல் வாய்ப்பளிக்கப்பட்டு ஆணையிடப்பட்டது.

அதன்படி 13.3.2017 அன்று ஆஜராகி தனது வாக்குமூலத்தினை பதிவு செய்தார். அதில் தான் குத்தகைதாரர் திரு. முருகன் என்பவரால் செலுத்தப்படாமலிருந்த நிலுவைத் தொகை குறித்து உரிய அறிவிப்பு அனுப்பியுள்ளதாகவும், அத்தியாவசிய மருந்து பொருட்கள் வாங்குவதற்கு மன்ற உறுப்பினர்கள் ஆட்சேபனை தெரிவித்து இருந்தனர் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்

அவர்களின் கவனத்திற்கு தொலைபேசி வாயிலாக கொண்டு செல்லப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்ற ஆணைக்குப் பின்னரும் ஏல நிலுவைத் தொகையினை வசூலிக்க உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படாத நிலையினைக் கருத்தில், கொண்டு அனுப்பப்பட்ட இம்முறைமன்ற நடுவம் 31.08.2017 நாளிட்ட அறிவிப்பாணையைத் தொடர்ந்து குற்றாலம் பேரூராட்சியின் தற்போதைய செயல் அலுவலர் திரு. இ. கணேசன் அவர்களிடமிருந்து நிலுவைத் தொகையினை குத்தகைதாரரிடமிருந்து வருவாய் வசூல் சட்டப்படி வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்து 12.09.2017 நாளிட்ட அறிக்கை வரப்பெற்றது.

மேலும், இம்முறைமன்ற நடுவம் 21.11.2017, 23.2.2018 நாளிட்ட அறிவிப்பாணைகள் மற்றும் 19.4.2018 அன்று விசாரணைக்கு ஆஜராக கோரிய 23.2.2018 நாளிட்ட அழைப்பாணையினைத் தொடர்ந்து குற்றாலம் பேரூராட்சி செயல் அலுவலரது மேற்படி குத்தகைதாரருக்கு பாத்தியப்பட்ட கட்டிடங்களின் மீது இணைப்பு செய்து வருவாய் வசூல் சட்ட விதிப்படி நிலுவைத் தொகையினை (ரூ.8,60,294/-) வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக 14.3.2018 நாளிட்ட அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

மேலும், இம்முறைமன்ற நடுவம் ஆணையிட்டதற்கிணங்க மேற்குறிப்பிட்ட நீதிமன்ற ஆணைகள் வரப்பெற்ற பின்னர் திரு. கு. லிங்கராஜ் என்பவர் 28.01.2016 முதல் 02.06.2017 வரை குற்றாலம் பேரூராட்சி செயல் அலுவலராக பொறுப்பு வகித்துள்ளாரெனவும் தெரிவித்துள்ளார். அதன் பின்னர் 02.06.2017 முதல் 17.5.2018 வரை திரு. கி. கணேசன் என்பவர் பொறுப்பு வகித்து வந்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவம் 8.5.2018 நாளிட்ட அழைப்பாணையினைத் தொடர்ந்து 21.06.2018 அன்று விசாரணைக்கு ஆஜரான தற்போதைய செயல் அலுவலர் திரு. மு. கனகராஜ், முன்னாள் குத்தகைதாரர் திரு. முருகன் என்பவரது சொத்தினை ஏல நிலுவைத் தொகைக்கு ஈடாக்கி உரிய அறிவிப்பினை (19.6.2018) அரசு வழக்கறிஞர் மூலம் வழங்கப்பட்டுள்ளதை உறுதி செய்து, அதன் நகலினையும் தாக்கல் செய்துள்ளார். மேலும், இம்முறைமன்ற நடுவத்தால் ஆணையிடப்பட்டவாறு மேற்படி ஏல நிலுவைத் தொகை குறித்தும், 4/2016க்குப் பின் மேற்படி பேரூராட்சியில் பணி புரிந்த

செயல் அலுவலர்கள் குறித்த விவரங்களையும் தனது 19.06.2018 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தாக்கல் செய்துள்ளார்:-

| குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் | 2015-16ஆம் ஆண்டு குத்தகைத் தொகை (ரூ.) | வசூலிக்கப்பட்டது (ரூ.) | பாக்கித் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| பேரூராட்சி கார் பார்க்/வாகன நுழைவுக் கட்டண வசூல் உரிமம் | திரு. எஸ்.முருகன் | 25,10,294 | 16,50,000 | 8,60,294 |

| பணி புரிந்த செயல் அலுவலர்கள் விவரம் | | |
|---|---|---|
| வ.எண். | பெயர் | பணிபுரிந்த காலம் |
| 1. | திரு. கு. லிங்கராஜ் | 28.01.2016 முதல் 02.06.2017 (மு) வரை |
| 2. | திரு. கி. கணேசன் | 02.06.2017 (பி) முதல் 17.05.2018 வரை |
| 3. | திரு. கு. லிங்கராஜ் | 23.05.18 முதல் 12.6.18 வரை |

மேற்குறிப்பிட்டவாறான விசாரணைகள், அறிக்கைகள் மற்றும் வாக்குமூலங்களின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு, இம்முறைமன்ற நடுவத்தால் ஆணையிடப்படுகிறது.

குற்றாலம் பேரூராட்சி செயல் அலுவலர் மாண்பமை நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளவாறு உறுதியான நடவடிக்கைகளை துரிதப்படுத்தி வருவாய் வசூல் சட்டப் பிரிவுகளின் கீழ் நிலுவைத் தொகை ரூ.8,60,294/-ஐ முழுமையாக வசூலித்து பேரூராட்சியின் கணக்கில் இருசால் செய்து அறிக்கையினை பேரூராட்சிகளின் இயக்குநருக்கும், இம்முறைமன்ற நடுவத்திற்கும் சமர்ப்பித்திட ஆணையிடப்படுகிறது. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் இதனை தீவிரமாக தனிக் கவனத்துடன் கண்காணித்திடவும் உறுதி செய்திடவும் ஆணையிடப்படுகிறது.

மேலும், இவ்வினத்தில் உறுதியான மற்றும் முறையான நடவடிக்கை எடுக்கத் தவறிய சம்பந்தப்பட்ட செயல் அலுவலர்கள் மீது துறை வாரியான நடவடிக்கை எடுக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 9-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திருமதி. லதா,
முன்னாள் தலைவர்,
சிறப்பு நிலை பேரூராட்சி,
குற்றாலம்.

2. செயல் அலுவலர்,
சிறப்பு நிலை பேரூராட்சி,
குற்றாலம்.

3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருநெல்வேலி,
இருப்பு ஜவஹர் நகர், பெருமாள்புரம்,
பாளையங்கோட்டை,

4) நகல்: இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநரகம்.
குறளகம்,
சென்னை–600 107.